# மத்தியமாகாணக் கல்வித் திணைக்களம்

# கண்டி

## அலகுப் பரீட்சை - 01

பாடம் : இந்துநாகரிகம் நேரம் : 1 மணி

1. பண்பாடு எனும் பதத்திற்கு பழந்தமிழ் இலக்கியங்களில் சுட்டப்படும் சொல்

   1. விதிகள் 2. பழக்கவழக்கம் 3. சால்பு 4. விழுமியம் 5. அறிவு

2. நாகரிகம் என்னும் சொல் முதன்முதலில் இடம்பெற்றது

   1. வேதங்கள் 2. இதிகாசங்கள் 3. சிலப்பதிகாரம் 4. திருக்குறள் 5. தொல்காப்பியம்

3. சிந்துவெளி நாகரிகம் சிறப்புடன் விளங்கிய காலமாக அமைவது

   1. கி.மு 2750-கி.மு 2275 2. கி.மு 3250-கி.மு 2270 3. கி.மு 1500-கி.மு 600 4. கி.மு1922-கி.மு 1930 5. கி.மு3000-கி.மு 2765

4. "இந்திய சிற்பக்கலை இந்தியாவிற்கு உரியது" எனக் கூறியவர்

   1. வில்லியம் ஜோன்ஸ் 2. அலெக்ஸான்டர் 3. சேர்.ஜோன்.மார்ஸல் 4. மா.இராசமாணிக்கனார்

   5. கன்னிங்காம்

5. இருக்கு வேதம் கொண்டுள்ள சூக்தங்களின் எண்ணிக்கை

   1. 1450 2. 1028 3. 1075 4. 6000 5. 1250

6. நீண்ட ஆயுளை அளிக்கவல்ல மந்திரமாக அமைவது

   1. பேஷஜானி 2. பௌஷ் டிகாணி 3. ராஜகர்மாணி 4. ஸ்திரீகர்மாணி 5. புருஷகர்மாணி

7. ஒழுக்கத்திற்குரிய தெய்வம்

   1. இந்திரன் 2. அக்கினி 3. வருணன் 4. உருத்திரன் 5. சோமன்

8. சிவாகமங்களின் தொகையாக அமைவது

   1. 20 2. 25 3. 28 4. 22 5. 38

9. பிரபஞ்ச உற்பத்தி,பிரபஞ்சப் படைப்பிற்கு முற்பட்ட நிலை,படைப்பின் மூலாதாரம் பற்றி இருக்கு வேதத்தில் பேசப்படும் சூக்தம்

   1. நாஸதீய சூக்தம் 2. புருஷ சூக்தம் 3. வருண சூக்தம் 4. யம சூக்தம் 5. பிரம்ம சூக்தம்

10. ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தைப் பண்படுத்துதலை சிவாகமங்கள் வகைப்படுத்துவது

    1. பிரதிட்டை 2. பிராயச்சித்தம் 3. உற்சவம் 4. கிரியைகள் 5. கர்ஷணம்

11. காயத்திரி மந்திரம் எக்கடவுளுக்குரியது.

1. வருணன் 2. இந்திரன் 3. ஞாயிற்றுக்கடவுள் 4. அக்கினி 5. உருத்திரன்

12.பிராயச்சித்தவிதி, ஆலய அமைப்புவிதி, கோபுரம், உமாமகேசுவரர் இலக்கணம் பற்றிக் கூறுவது.

1. சரியா பாதம் 2. கிரியா பாதம் 3. யோக பாதம் 4. சிவபாதம் 5. ஞானபாதம்

13. சிந்துவெளிகாலத்தில் அகழ்வாய்வு செய்யப்பட்ட மொகஞ்சதாரோ அமைந்துள்ள இடம்

1. மேற்கு பஞ்சாப் 2. ஹரப்பா 3. பாகிஸ்தான் 4. தகஞ்சதாரோ 5. தமிழ்நாடு

14. சாக்த ஆகமங்களின் பெயர்கள் அடங்கும் தொகுதி

1. காமிகம், திரிபுரரகசியம் 2. வாதுளம், தீப்தம் 3. காரணம், வைகாசனம்
4. திரிபுரரகசியம், காமகலாவிலாசம் 5. மகாநிருவாணதந்திரம், கரணம்

15. இந்துக்களின் அரசியல் பற்றி அறிய உதவும் நூலாக அமைவது

1. சிற்பசாஸ்திரம் 2. அர்த்தசாஸ்திரம் 3. நாட்டியசாஸ்திரம் 4. ஈஸ்வரசங்கீதை

5. கிருஷ்ணசந்தம்

16. ஆகமங்கள் கூறும் கிரியை நெறிகளை எடுத்துக்கூறும் நூல்

1. மகாபாரதம் 2. பத்ததிகள் 3. புராணங்கள் 4. வேதங்கள் 5.தருமசாஸ்திரம்

17. இருக்கு என்பதன் பொருள்

1. மந்திரம் 2. பாட்டு 3. கிரியை 4. இசை 5. இலக்கியம்

18. அட்டாங்க யோகங்க யோகங்களுள் மூன்று அடங்கும் தொகுதி

1. இயமம், மகிமா, தாரணை 2. ஆசனம், கரிமா, லகிமா 3. இயமம், நியமம், ஆசனம்

4. அணிமா, கரிமா, லகிமா 5. தாரணை, அணிமா, சமாதி

19. ஆலயங்களில் திருவுருவங்களை செதுக்குவதற்குரிய கருங்கல்லைத் தெரிவு செய்தல் பற்றிக் கூறும் பகுதி

1. கர்ஷணம் 2. சீலாபரீட்சணம் 3. உற்சவம் 4. பிரதிட்டை 5. பிரகார லட்சண விதிப்பட

20. பிருகுவாங்கிரஸ் என அழைக்கப்படும் வேதம்

1. இருக்கு 2. சாமம் 3. திரயீ வித்தியா 4. யசூர் 5. அதர்வம்

**2*20=40** புள்ளிகள்

பகுதி-11

- விரும்பிய மூன்று வினாக்களுக்கு விடை தருக.

1. இந்து நாகரிகம் தொடர்பாக மேல்வரும் விடயங்களை விளக்குக.
   அ) நாகரிகம் என்பதை வரையறைப் படுத்துக.
   ஆ) பண்பாடு என்பதை விளக்குக.
   இ) இந்து நாகரிகத்தின் சிறப்புகளை ஆராய்க. **(5+5+10=20 புள்ளிகள்)**

2. சிந்துவெளிக்காலம் தொடர்பாக மேல்வரும் விடயங்களை விளக்குக.
   அ) சமயநிலை
   ஆ) வாழ்க்கை முறை
   இ) கலைகள் **(7+6+7=20 புள்ளிகள்)**

3. வேதகாலம் தொடர்பாக மேல்வரும் விடயங்களை விளக்குக.
   அ) வேதங்களின் வகையும் அமைப்பும்
   ஆ) வழிபாட்டு முறைகள்
   இ) தத்துவ சிந்தனைகள் **(7+7+6=20 புள்ளிகள்)**

4. "வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்" என்ற சிறப்பிற்குரிய ஆகமத்தின் சிறப்புக்களை மேல்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு ஆராய்க.
   அ) ஆகமங்கள் என்பதன் பொருள் விளக்கம்.
   ஆ) ஆகமங்களின் சிறப்பு
   இ) கிரியைகளும் அனுட்டானங்களும்
   ஈ) சைவ சித்தாந்த சிந்தனைகள் **(2+5+7+6+=20 புள்ளிகள்)**